GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4A**

**6029–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

LAW OF EVIDENCE

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the doctrine of 'Res Gestae' with decided cases.

   தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் துணையுடன் 'ஒன்றிய செயல்' கோட்பாட்டினை விளக்கவும்.

2. What is dying declaration? What are the conditions for its admissibility as evidence?

   மரண வாக்குமூலம் என்றால் என்ன? எந்தச் சூழ்நிலைகளில் அது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

3. Explain in detail the privileged communication under the Indian Evidence Act.

   இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் காப்புடைச் செய்திகளைப் பற்றி விபரமாக விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Who is an Expert? State the circumstances in which expert opinion becomes relevant?

   வல்லுநர் என்பவர் யார்? எந்தச் சூழ்நிலைகளில் வல்லுநரின் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படும்?

5. What are public documents? How they are proved?

பொது ஆவணங்கள் என்றால் என்ன? அவை எவ்வாறு நிரூபிக்கப்படுகிறது?

6. What are leading questions? State when such questions may or may not be put to witness.

விடைபொதி வினாக்கள் என்றால் என்ன? ஒரு சாட்சியிடத்தில் எப்பொழுது இத்தகைய வினாக்கள் கேட்க இயலும், கேட்க இயலாது என்பதை எடுத்துக் கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Alibi

வேற்றிடவாதம்

(b) Oral Evidence

வாய்மொழி சாட்சியம்

(c) Primary Evidence

முதன்மை சான்று

(d) Ancient document

தொல்லாவணம்

(e) Latent ambiguity

உட்கிடை பொருள்மயக்கம்

(f) May Presume

அனுமானிக்கலாம்

(g) Crippen's case

கிரிப்பன் வழக்கு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is tried for the murder of 'B' by poison. The fact is that before the death of 'B', 'A' procured similar poison that which was administered to 'B'. Is this fact relevant?

'B' என்பவரை நஞ்சிட்டு கொலை செய்ததாக 'A' என்பவர் மீது விசாரணை நடைபெறுகிறது. 'B' மரணமடைவதற்கு முன்பு, அவருக்கு இடப்பட்டது போன்ற நஞ்சினை 'A' வாங்கினார். இது தொடர்புடைய சங்கதியா?

9. A client sells his property to his advocate and then brings a suit against him for setting aside the sale on the ground of fraud. On whom the burden of proving the good faith of the transaction lies? State the reasons.

ஒரு கட்சிக்காரர் தனது சொத்தை தனது வழக்கறிஞருக்கு விற்கிறார். பின்னர் மோசடி நடந்துவிட்டது என்ற முகாந்திரத்தின் அடிப்படையில் அந்த விற்பனையை ரத்து செய்யக் கோரி வழக்கிடுகிறார். நன்னம்பிக்கையில் தான் விற்பனை நடைபெற்றது என்று மெய்ப்பிக்கும் பொறுப்பு யாருடையது? காரணங்களைக் கூறவும்.

10. 'A' is accused of an offence. During police custody he revealed about the place where he had hidden the weapons used for the offence. Weapons were discovered from that place by the police. What is the evidentiary value of his statement to police?

'A' என்பவர் ஒரு குற்றம் செய்ததாக குற்றம்சாட்டப்படுகிறார். அவர் காவலரின் கட்டுப்பாட்டில் விசாரணை செய்யப்படும் பொழுது, தான் குற்றம் செய்ய பயன்படுத்திய ஆயுதங்களை மறைத்து வைத்துள்ள இடத்தைப் பற்றி கூறுகிறார். அவர் கூறிய இடத்திலிருந்து காவல்துறையினர் ஆயுதங்களை பறிமுதல் செய்கின்றனர். குற்றம் சாட்டப்பட்டவர் காவல்துறையினரிடம் வழங்கிய வாக்குமூலத்தின் மதிப்பு என்ன?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**TA4B**

**6042–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Elucidate critically the doctrine of Separation of Powers and state the extent to which this doctrine is incorporated in the Constitution of India.

   சட்டத்திறன்களின் பிரித்தல் கோட்பாட்டை திறனாய்வு செய்து, இந்தக் கோட்பாடு எந்த அளவுக்கு இந்திய அரசமைப்பில் கூட்டிணைவாக சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை திறனாய்வு செய்க.

2. The exercise of discretion must not be arbitrary, fanciful and influenced by extraneous considerations. — Comment

   உளத் தேர்வின்படி செயல்படுத்தப்படும் அதிகாரத்தை தன்னிச்சையாக கற்பனையாக மற்றும் உளப்போக்கில் தொடர்பற்ற காரணங்களை கருத்தில் கொண்டு செயல்படுத்தக் கூடாது. — கருத்துரை தருக.

3. “Bias vitiates all quasi-judicial proceedings”. Critically anlayse the statement in the light of decided cases.

   “மனச்சாய்வு நீதிப் போல்வு செயல் நடவடிக்கைகளைச் சீரழிக்கிறது.” — தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் கண்ணோட்டத்தில் இக்கூற்றைத் திறனாய்வு செய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the privileges and immunities enjoyed by the Government in a legal proceedings? Discuss with decided cases.

   ஒரு வழக்கு நடவடிக்கையில் அரசாங்கத்தால் அனுபவிக்கப்படுகின்ற சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள் யாவை? தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் மூலம் விவாதிக்க.

5. Explain the reasons for the growth and development of Delegated Legislation in India.

இந்தியாவில் அதிகார ஒப்படைவு விதியாக்கத்தின் வளர்ச்சிக்கான காரணங்களை விளக்குக.

6. "The law relating to the tortious liability of the Government for the acts of its own servants has been developed in India in its own way." — Discuss.

"தனது ஊழியர்கள் செய்த செயலுக்கு அரசின் தீங்கியல் கடப்பாடு குறித்த சட்டம் இந்தியாவில் தானாகவே வளர்ந்தது" — விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Laying before Parliament
பாராளுமன்றம் முன் வைத்தல்

(b) Droit Administratiff
ட்ராய்ட் அட்மின்ஸ்டிரேட்டிப்

(c) Res Judicata in administrative decisions
நிர்வாகத் தீர்ப்புகளில் முன்தீர்ப்புத் தடை

(d) Domestic Tribunal
உள்ளுறை தீர்ப்பாயம்

(e) S.P. Gupta vs Union of India
எஸ்.பி. குப்தா எதிர் இந்திய அரசு

(f) Writ of Quo Warranto
தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை

(g) Public Corporation
பொது நிறுவனம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Parent Act authorised the executive to prohibit manufacture of beedis in certain areas during certain period. Based on this, the Government issued a General Order prohibiting all persons from carrying on that business. Decide the validity of the order.

முதன்மை சட்டமானது நிர்வாகத்திற்கு பீடித் தொழிலை சில சூழ்நிலைகளில் தடைசெய்ய அனுமதி வழங்கியது. அச்சட்டத்தின் மூலம் நிர்வாகம் பொதுவான உத்தரவை பிறப்பித்து எல்லோரையும் அத்தொழில் செய்யவிடாமல் தடுத்தது. அவ்வுத்தரவின் செல்லுந்தன்மையை விளக்குக.

9. Rubesh filed a divorce petition against his wife Rathika. The Judge of the Court had once appeared on behalf of Rathika on a family dispute as her counsel. The divorce petition was dismissed. The dismissal order was challenged on the grounds of Bias. Decide.

ரூபேஸ் தனது மனைவி ராதிகாவிற்கு எதிராக மணமுறிவு மனுவினை முன்னிட்டார். அந்த நீதிமன்ற நீதிபதி முன்பொருமுறை ராதிகாவிற்காக அவரது குடும்பத் தகராறு வழக்கொன்றில் வழக்கறிஞராக வாதிட்டுள்ளார். இந்நேர்வில் மணமுறிவு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. அந்த ஆணை மனச்சாய்வு அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டதென மறுதலிக்கப்படுகிறது. தீர்மானிக்க.

10. 'X' is detained by the executive magistrate claiming that his presence is dangerous to the security of the State. Later on, finding that he was innocent, he was released. 'X' claims compensation for the illegal detention. — Decide.

'X'-ன் செயல்பாடு நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் என ஆட்சித்துறை நடுவர் வாயிலாக காவலில் வைக்கப்பட்டார். பின்பு அவர் அவ்வாறு ஆபத்து விளைவிக்கும் செயலில் ஈடுபடவில்லை என அறுதியிடப்பட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். தன்னை சட்டத்திற்கு புறம்பாக காவலில் வைத்தாக 'X' இழப்பீடு கோருகிறார். முடிவு செய்க.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4C** **5990–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically evaluate the power of the Government to refer an industrial dispute under the Industrial Disputes Act, 1947.

   தொழில் தகராறு சட்டம் 1947-ன் கீழ் தொழிற்துறை சச்சரவுகளை கட்டாய தீர்ப்பு முறைக்கு அனுப்புதலுக்கான அரசின் அதிகாரத்தை கூர்ந்தாய்வு செய்க.

2. Explain the various wage concepts under the Payment of Wages Act, 1936.

   1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அமையும் வெவ்வேறு வகையான ஊதியம் குறித்த கருத்தமைவுகளை விளக்குக.

3. What are the objects on which the general funds and political funds of a registered trade union may be spent under the Indian Trade Union Act, 1926?.

   எந்தெந்த நோக்கங்களுக்கு இந்திய தொழிற்சங்க சட்டம் 1926-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் அமைக்கப்பெறும் "பொது நிதி" மற்றும் "அரசியல் நிதி"களிலிருந்து செலவினங்கள் செய்ய முடியும்?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define "Workman" under the Industrial Disputes Act, 1947. Refer to decided cases.

   1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் "பணியாளர்" என்பதை வரையறு. முடிவு செய்யப்பட்ட வழக்குகளைக் குறிப்பிடுக.

5. Explain the concept of living wage, fair wage and minimum wage. How is minimum wage determined?

வாழ்க்கைக்குப் போதுமான உதியம், நியாயமான ஊதியம், குறைந்த பட்ச ஊதியம் ஆகியவை குறித்த கருத்துப் படிவத்தை விளக்குக. குறைந்த பட்ச ஊதியம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை கூறுக.

6. Define 'Standing Orders'. State the procedure for certification of standing orders.

'நிலையாணைகள்' என்பதை வரையறை செய்க. நிலையாணைகளை சான்றளித்தலுக்கான நடைமுறைகளை குறிப்பிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக. :

(a) Recognition of trade union
தொழிற்சங்க அங்கீகாரம்

(b) Legal nature of standing orders
நிலையாணைகளின் சட்டத்தன்மை

(c) Works Committee
பணிக்குழு

(d) Theories of Wages
ஊதியக் கோட்பாடுகள்

(e) Need based minimum wage
தேவை அடிப்படையிலான குறைந்த பட்ச ஊதியம்

(f) Appropriate Government
உரிய அரசு

(g) Master and servant relationship
எஜமானருக்கும் ஊழியருக்குமான உறவு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A laundry was attached with a medical college hospital. Twenty workmen employed in the laundry were engaged in washing the clothes used in the hospital. Decide whether the laundry is an Industry.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்றுடன் சலவைச் சாலை இணைக்கப்பட்டிருந்தது. அதில் வேலை செய்த இருபது தொழிலாளிகள் மருத்துவமனையின் துணிகளை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்பட்டனர். சலவைச் சாலை தொழிற்சாலையா என்பதனை தீர்மானிக்கவும்.

9. 'X' is running a textile unit. The minimum wages fixed for the textile unit by the Government was Rs.500/-. 'X' challenges this, stating that the industry is not financially sound to pay minimum wages at Rs.500/-. Decide.

'X' என்பவர் ஒரு ஆடை தொழிற்சாலை நடத்துகின்றார். அத்தொழிலுக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியமானது ரூ.500/- ஆகும். தனது தொழிற்சாலை நிதிபற்றாக்குறையில் உள்ளதால் மேற்கூறிய குறைந்தபட்ச ஊதியம் அளிக்க இயலாது என்று 'X' கூறுகிறார் – முடிவு செய்க.

10. An employer declared lay off to his workmen and offered them alternate employment in their another branch situated at 2 km away from the main factory. A few workers refused to accept the alternate employment. Workers claimed lay off compensation. Advise the employer.

பணியாண்மையர் ஒருவர் தனது பணியாளர்களைத் தற்காலிகமாக பணியில் இருந்து நிறுத்தி வைத்து அதற்குப் பதிலாக 2 கி.மீட்டர் தொலைவில் இருக்கும் தனது கிளை அலுவலகத்தில் பணி செய்யப் பணிக்கின்றார். ஆனால் சில பணியாளர்கள் மாற்று பணியினைச் செய்ய மறுக்கின்றனர். அவர்கள் நிறுத்தி வைத்தல் என்பதற்கான இழப்பீடு வழங்க வேண்டுமென்று கோருகின்றனர். பணியாண்மையருக்கு உரிய ஆலோசனையை வழங்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**TA4D** **5991–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the theories of relationship between International Law and Municipal Law and the State Practices in UK, USA and India.

   பன்னாட்டுச் சட்டத்திற்கும் உள் நாட்டுச் சட்டத்திற்கும் இடையேயான தொடர்பை விவரிக்கும் கொள்கைகளையும் மற்றும் இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடு மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் பன்னாட்டுச் சட்டத்தை பின்பற்றுதல் குறித்த நடைமுறைகளையும் ஆராய்க.

2. "Every international wrongful act of a State entails international responsibility of that State" – Discuss.

   "ஒரு நாட்டின் ஒவ்வொரு சர்வதேச தீங்கிற்கும் அந்நாடே சர்வதேச பொறுப்பு நிலைக்கு உட்பட்டதாகும்" - விவாதிக்க.

3. Discuss the provisions relating to termination or withdrawal and suspension of the operation of treaties under the Vienna Convention on Law of Treaties, 1969.

   1969-ம் வருடத்திய வியன்னா மாநாட்டு உடன்படிக்கை விதிகளின் கீழ் உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டு வருதல், திரும்ப பெறுதல் மற்றும் செயல்பாட்டினை நிறுத்தி வைத்தல் குறித்த சட்ட விதிகளைக் குறித்து விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the concept of 'Continental Shelf'. What are the rights of the coastal and other States in the continental shelf?

'கண்டத்திட்டு' கருத்துருவை விளக்குக. கண்டத்திட்டு மீது கடலோர நாட்டிற்கும் மற்ற நாடுகளுக்குமுள்ள உரிமைகள் யாவை?

5. "Recognition of a State is not a legal but political action". Explain.

"நாடுகளை அங்கீகரித்தல் என்பது ஒரு அரசியல் சார்ந்த செயலாகும் ஆனால் சட்டத்தை சார்ந்தது அல்ல" - விளக்குக.

6. Discuss the various modes of acquisition of State Territory.

நாட்டின் எல்லையை பெறக்கூடிய பல்வேறு வழிமுறைகளைக் குறித்து விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Austin's views on International Law

சர்வதேச சட்டம் பற்றி ஆஸ்டினின் கருத்து

(b) Codification of International Law

பன்னாட்டுச் சட்டத்தை தொகுத்தல்

(c) Island of Palmas Arbitrations

பால்மாஸ் தீவு இசைவு தீர்ப்பு வழக்கு

(d) Collective intervention

கூட்டுத் தலையீடு

(e) Extradition

மீட்டொப்படைத்தல்

(f) Jus cogens

ஜஸ் கோஜன்ஸ்

(g) The General Assembly

பொது அவை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Government of 'X' is overthrown and the rebels establish a new government. Britain continues to recognise the old government but accords de facto recognition to the new government. A suit is filed in Britain by the new government of 'X' against a bank for recovery of some money due to 'X'. The suit is contested by the old government which claims that the money should belong to it since it is the de jure government and hence the lawful representative of 'X'. Will it succeed?

'X' அரசாங்கத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி புதிய அரசாங்கத்தை அமைத்தனர். பிரிட்டிஸ் அரசு பழைய அரசாங்கத்தை தொடர்ந்து அங்கீகரித்து புதிய அரசாங்கத்திற்கு நிகழ்நிலை அங்கீகாரம் அளித்தது. 'X'-ன் புதிய அரசாங்கம் பிரிட்டனில் பணம் திரும்ப பெறுவது குறித்து வங்கிக்கு எதிராக ஒரு வழக்கை தாக்கல் செய்தது. அதில் 'X'-க்கு எதிராக செலுத்த வேண்டிய மீதி தொகையை கோரியது. பழைய அரசாங்கமானது இவ்வழக்கை எதிர்த்து வழக்கு கோரி, தாக்கல் செய்துள்ள பணமானது பழைய அரசாங்கத்திற்கு சொந்தமானது ஏனெனில் பழைய அரசாங்கம் தான் சட்டப்படியான அங்கீகாரம் பெற்றாகும். அதனால் சட்டப்படியான அங்கீகாரம் பெற்ற 'X' அரசாங்கத்திற்கு பிரதிநிதித்துவம் எனக் கூறியது. இக்கோரிக்கை நியாயமானதா?

9. A murder was committed inside a foreign commercial vessel docked in Bombay harbour. The vessel left the harbour for the high seas soon after it was pursued by the police vessel belonging to the Bombay coast-guard and it ignored all the signals given to it to stop. It entered the territorial waters of a neighbouring State before it could be seized by the pursuing vessel of the Bombay coast guard still following, which then seized the vessel and brought it to Bombay for a trial. Decide the legality of the action taken by the Bombay Coast Guard.

பாம்பே துறைமுகத்தில் அயல்நாட்டு வணிக கப்பல் நிறுத்தி வைத்திருந்தபோது அதனுள் கொலை ஒன்று செய்யப்பட்டுவிட்டது. பின்னர் அக்கப்பல் உடனடியாக பாம்பே கடலோர காவல்படை போலீஸ் பிடிப்பதற்கு முன்னர் பாம்பே துறைமுகத்தை விட்டு ஆழ்கடல் பகுதிக்கு சென்றுவிட்டது மற்றும் போலீசார் செய்த எந்தவித சைகைக்கும் கட்டுப்படாமல் சென்று விட்டது. பாம்பே கடலோர போலீஸ் பிடிப்பதற்கு முன்னர் அண்டை நாட்டு எல்லையோர கடல் பகுதிக்கு சென்றுவிட்டது. அப்படியிருந்தும் பாம்பே கடலோர போலீஸ் பின்தொடர்ந்து அக்கப்பலை கையகப்படுத்தி பாம்பே கொண்டு சென்று நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தியது. பாம்பே கடலோர காவல்துறை செய்த செயல், சட்டப்படி சரியானதா? தீர்மானிக்கவும்.

10. 'X' a citizen of 'Y' country fled his country because of fear of internal armed conflict to 'Z' Country as refugee. 'Z' accepts 'X' as refugee. Due to the internal emergency of country 'Z' it asked all the refugees to leave its country – Decide.

உள்நாட்டுக் கலகம் காரணமாக 'Y' நாட்டிலிருந்து 'X' குடிமகன் தனது நாட்டைவிட்டு 'Z' நாட்டிற்குள் அகதியாக குடிபெயர்கிறார். 'Z' நாடும் அகதியாக ஏற்றுக்கொண்டது. ஆனால் 'Z' நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு அவசரநிலையால் 'Z' நாடானது தன் நாட்டிற்குள் அகதிகளாக வந்தவர்கள் அனைவரும் நாட்டைவிட்டு வெளியேற கேட்டுக்கொண்டது. தீர்மானிக்க.

———————